**இலங்கை சமுத்திர பல்கலைக்கழகம் - 2023**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் பல்கலைக்கழகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம்

தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பல்கலைக்கழகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பல்கலைக்கழகம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது மூலதன மானியம் மற்றும் நன்கொடையாகக் கிடைக்கப்பெற்ற ரூபா 53,263,671 நிதிச் செயலாற்றல் கூற்றில் பரிமாற்றல்கள் அல்லாத கொடுக்கல் வாங்கல்களில் இருந்து கிடைத்த | 2024 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகள் சமர்ப்பிக்கப்பிக்கும் போது சரிசெய்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களில் மூலதன மானியம் மற்றும் நன்கொடைப் பெறுவனவுகளை சரியாக |

| | | | |
|---|---|---|---|
| | வருமானமாக சீராக்கப்பட்டிருக்கும் போது உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றில் மீண்டும் உரிய மூலதன மானியம் மற்றும் நன்கொடையின் கீழ் சீராக்கப்பட்டு, திரண்ட மிகையில் அப்பெறுமதி அகற்றப்பட்டதன் காரணமாக 2023 திசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் உரிமை மூலனம் சரியாக காண்பிக்கப்பட வில்லை. | | சீராக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்குரிய செலுத்த வேண்டிய செலவினம் ரூபா 2,088,390 கணக்கீடு செய்யப் படாமையின் காரணமாக ஆண்டின் மிகை மற்றும் நடைமுறைப் பொறுப்புக்கள் அப் பெறுமானத்தால் முறையே அதிகரித்தும் மற்றும் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | நாடு முழுவதும் பல்கலைக்கழகத்தின் நிலையம் ஸ்தாபிக்கப்பட்டமையால் தகவல்கள் பிரதான அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கும் போது இந்த பிரச்சினைகள் ஏற்பட்டிருந்தது. | ஆண்டிற்குரியதாக செலுத்த வேண்டிய செலவினங்களை சரியாக நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்குதல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 23,278,137 ஆன செலவிடப் படாத மூலதன மானியக் கணக்கின் மீதி உரிமை மூலதனத்தின் கீழ் காண்பிப்பதற்குப் பதிலாக நடைமுறைப் பொறுப்பின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 11 இன் பிரகாரம் திறைசேரியால் வழங்கப்பட்டுள்ள மூலதன நிதி ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்ட அளவு நிதி செயலாற்றல் அறிக்கையில் பரிமாற்றல்கள் அல்லாத கொடுக்கல் வாங்கலின் கீழ் குறிப்பிடப்பட்டு பயன்படுத்தப்படாத அளவு நடைமுறைப் பொறுப்பாக நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்டுள்ளது. | மூலதன நிதி ஏற்பாட்டில் செலவிடப்படாத மூலதன மானியக் கணக்கின் மீதி உரிமை மூலதனத்தின் கீழ் காண்பிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் போது மூலதனப் பெறுவனவுகள் ரூபா 66,156,298 ஆக இருந்த போதிலும் காசுப்பாய்ச்சல் கூற்றில் அப்பெறுமதி ரூபா 46,460,299 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | மூலதன ஏற்பாடுகளின் பெறுவனவு பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 11 இன் பிரகாரம் மேற்கொள்ளப் பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் பயன்படுத்தப்பட்ட நிதி எற்பாட்டின் அளவு மூலதனப் பெறுவனவாக செலவிடப்படாத நிதி ஏற்பாடு பெறுவனவாகவும் செலவிடப்படாத நிதி ஏற்பாட்டின் அளவு நடைமுறை பொறுப்பில் அதிகரிப்பாகவும் கருதி தொழிற்பாடு மூலதன அதிகரிப்பாக காண்பிக்கப்பட்டுள்ளது. | மூலதன நிதி ஏற்பாட்டின் பெறுவனவு காசுப்பாய்ச்சல் கூற்றில் சரியாக காண்பிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | 2022 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 361,956 செலவினம் மீளாய்வாண்டின் செலவினமாக குறிப்பிடப்பட்டதன் காரணமாக ஆண்டின் மிகை அப்பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | செலவினங்களை மேற்பார்வை செய்வதற்காக உள்ளக முறைமையொன்று அறிமுகப் படுத்தப்பட்டிருந்த போதிலும் பல்கலைக்கழகத்தின் நிலையங்கள் நாடு முழுவதும் பல்வேறு பிரதேசங்களில் ஸ்தாபிக்கப்பட்டமை, பதவியணி யினர் போதியளவாக இல்லாமை போன்ற விடயங்களின் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டிருந்ததுடன் இந்த நிலைமையைத் தவிர்த்துக் கொள்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | ஆண்டிற்குரிய செலவினங்களைச் சரியாக இனங்கண்டு சீராக்கம் மேற் கொள்ளப்படல் வேண்டும். |

### 1.5.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசம்பர் 31 இல் உள்ளவாறு 05 பாட நெறிகளுக்குரியதாக கிடைக்க வேண்டிய பாடநெறிக் கட்டணம் ரூபா 965,005 ஆக இருந்த போதிலும் பட்டோலையின் பிரகாரம் அப் பெறுமதி ரூபா 1,286,158 ஆனமையால் ரூபா 321,153 இணக்கமின்மை காணப்பட்டது. | சரிசெய்து தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படும். | நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற வருமானம் மற்றும் அதற்குரிய பட்டோலைகள் இணக்கம் செய்யப்படல் வேண்டும். |

### 1.5.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| செலுத்த வேண்டிய கணக்கின் கீழ் இனங்காணப்படாத வருமானமாக காண்பிக்கப்பட்ட ரூபா 859,430 தொகைக்குரிய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வில்லை. | தற்போது இனங்கண்டு 2024 இன் இறுதிக் கணக்குகளில் சரி செய்யப்பட்டுள்ளதுடன் மிகுதித் தொகையும் எதிர்காலத்தில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்காய்விற்குத் தேவையான தகவல்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீரமானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் | வருமானம் உழைக்கும் அலகாக அமுலில் உள்ள தொலைக்கல்வி நிலையங்களை ஸ்தாபித்தல் தொடர்பாகவும், | அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்தை கோரி கடிதம் தற்போது அனுப்பப்பட்டுள்ளது. | வருமானம் உழைக்கும் அலகாக தொலைக்கல்வி நிலையங்களை |

| | | | | |
|---|---|---|---|---|
| | பிரமாணம் 124(2) | பதவியணியினர் படிகளைச் செலுத்துதல் தொடர்பாகவும் அமைச்சு செயலாளரின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வில்லை. | | ஸ்தாபித்தல் மற்றும் பதவியணியினருக்கு படிகளை செலுத்து தல் தொடர்பாக அமைச்சு செயலாளரின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய இலக்கம் 01/2020 என்ற அரச நிதி சுற்றறிக்கை | | | |
| i. | நிதிப் பிரமாணம் 371(2)(ஆ) | முறையான அங்கீகாரம் இன்றி ஆகக் கூடிய முற்பண எல்லையை விஞ்சி 13 சந்தர்ப்பங்களின் போது ரூபா 106,000 முதல் ரூபா 674,800 வரையான வீச்சில் முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. | பணவீக்க நிலைமையின் கீழ் கிரயங்கள் உயர்வடைந்து சென்றதன் காரணமாக வும், சேவையினை பெற்றுக் கொள்வதற்கு முன்னர் பணம் செலுத்த வேண்டியிருந்த நடை முறை ரீதியிலான காரணத்தின் அடிப்படையிலும் உரிய முற்பணங்கள் விடுவிக்கப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| ii. | நிதிப் பிரமாணம் 371(5) | மீளாய்வாண்டில் 25 சந்தர்ப்பங்களின் போதும் வழங்கப்பட்ட கூட்டு மொத்தமான ரூபா 1,893,476 முற்பணம் ஆண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது ரூபா 1,166,091 முடிவுறுத்தப்பட்டுள்ள துடன் தீர்க்கப்படாத முற்பண நலனாளிகளுக்கு அவற்றை தீர்க்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. | உரிய பணிகள் நிறைவு பெற்றவுடன் முற்பணத்தைத் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| iii. | நிதிப் பிரமாணம் 756(6) | 2019 ஆம் ஆண்டு முதல் வருடாந்த பொருள் மெய்மை ஆய்வு மேற்கொள்ளப்பட் டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகள் | வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகள் மேற் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | பூர்த்தி செய்யப்படுவதுடன் அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | கொள்ளப்படல் வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனவிதிக் கோவையின் XIX அத்தியாயத்தின் 5.3.1 மற்றும் 5.5.1 ஆம் பரிவு | மட்டக்குளி, திருகோணமலை மற்றும் தங்காலை அரச விடுதிகளில் குடியிருக்கின்ற 07 உத்தியோகத்தர்களிடமிருந்து 2016 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் மே வரை அறவிட வேண்டிய கூட்டுமொத்தமான ரூபா 1,808,783 ஆன வீட்டு வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | இந்தக் கட்டிடங்களில் குடியிருப்பதற்காக ஒதுக்கப்படுகின்ற வீடுகளாக இனங்காணாமையினால் வாடகைப் பணத்தை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | அரசாங்கத்தின் வீடுகளில் குடியிருக்கின்ற உத்தியோகத்தர்களிடமிருந்து உரிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவு சட்டத்தின் 5(1) ஆம் பிரிவு | 29 நாட்களுக்கும் 144 நாட்களுக்கும் இடையிலான கால தாமத்தின் பின்னர் 05 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 4,744,924 பணிக் கொடை செலுத்தப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் தாமதங்களை தடுத்துக் கொள்வதற்கும், நிதியத்தை முகாமைத்துவம் செய்து குறித்துரைத்த காலத்தில் பணிக்கொடை பணத்தை செலுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | பணிக்கொடைப் பணம் கால தாமதம் இன்றி செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 2023 சனவரி 18 ஆம் திகதிய BD/HRD/126/214/ 19/2023 என்ற திறைசேரி செயலாளரால் கல்வி அமைச்சின் செயலாளருக்கு முகவரியிடப்பட்ட சுற்றறிக்கை கடிதத்தின் 05ஆம் பந்தி | பிணைமுறிகளை மீறிய விரிவுரையாளர்கள் இருவரிடமிருந்து மீளாய்வாண்டில் அறவிடப்பட்ட ரூபா 2,876,769 தொகை திறை சேரிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பல்கலைக்கழகம் மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம் 805 இன் பிரகாரம் நிதியினை நிறுத்திவைக்கப்பட்டதுடன் இந்த சுற்றறிக்கை பல்கலைக்கழகத்திற்கு உரிய பிரகாரம் நிருவாக சபையின் அங்கீகாரத்தில் எதிர்காலத்தில் | திறைசேரி செயலாளரின் சுற்றறிக்கை கடிதத்தின் பிரகாரம் உரிய பணம் திறைசேரிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | பெற்றுக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது | |
| (ஊ) | 2014 இன் 31 ஆம் இலக்க இலங்கை சமுத்திர பல்கலைக் கழக சட்டத்தின் 66 ஆம் பிரிவு | 1976 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் ஏற்பாடுகளில் உரித்தாக்கிக் கொள்ளப்படாதிருந்தமை காண்பிக்கப்பட்ட போதிலும் பல்கலைக் கழகத்தின் கல்விசார் மற்றும் கல்விசாரா பிரிவுளுக்காக பல்கலைக்கழக ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்ட தேசிய பல்கலைக்கழகங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் மற்றும் சம்பள படிநிலைகளுக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் அங்கீகரித்துக் கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறே தகுதி பரிசோதனைகளுக்காக செலுத்துதல், தொலைக் கல்விப் பிரிவுகளை ஸ்தாபித்தல் மற்றும் வெளிவாரி விரிவுரை படிகளைச் செலுத்துவதற்காக திறைசேரி அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளாமல் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை அடிப்படையாகக் கொள்ளப்பட்டிருந்தது. | பல்கலைக்கழகம் ஒன்றை பேணிச் செல்லும் போது தேவையான நியதிகள், விதிகள், இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்தின் நிருவாக சபைக்கு சமர்ப்பித்து அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படுவதுடன் இதற்காக நிருவாக சபையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது | இலங்கை சமுத்திர பல்கலைக் கழக சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.7 நிதி முகாமைத்துவம்

| அவதானிப்புக்கள் | கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது அமைச்சின் மூலம் பல்கலைக்கழகத்தின் பிரதேச நிலையங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக வழங்கப்பட்ட மூலதன மானியம் ரூபா 3,019,030 தொகை உரிய நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படாமல் உரிய அங்கீகாரம் இன்றி நிலையான வைப்புக் கணக்கில் | இந்த தொகை கட்டிடங்கள் நிர்மாணித்தல் நிறுத்திவைத்தல் பணமாக இருந்ததுடன் நிறுத்தி வைத்தல்களை விடுவிக்கும் வரை வருமானம் பெறும் மூலங்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. | அமைச்சினால் வழங்கப்பட்ட மூலதன மானியங்கள் உரிய நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படல் வேண்டும். |

முதலீடு செய்யப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு
### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 3,733,753 மிகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 44,713,970 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 48,447,723 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு அரசாங்கத்தின் மீண்டெழும் மானியம் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு
### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| அவதானிப்புக்கள் | கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தொழில்சார் பயிற்சியில் ஈடுபடுகின்ற பொருளாதார கஷ்டங்கள் உள்ள மாணவர்களுக்காக அமைச்சினால் வழங்கப்படுகின்ற நிபுணத்தா சிசுசவிய மாணவர் உதவி நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் 2023 யூன் மாதத்தின் போது 418 மாணவர்களுக்காக ரூபா 6,632,000 வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் 178 மாணவர்களுக்கு ரூபா 623,000 மாத்திரம் செலுத்தப்பட்டிருந்தது. சேமிக்கப்பட்ட ரூபா 6,009,000 தொகை உரிய நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படாமல் நடைமுறைக் கணக்கில் செலவு வைக்கப்பட்டு மீளாய்வாண்டின் திசம்பர் 31 வரையும் விளைவற்றுக் காணப்பட்டது. | நலனாளிகளுக்கு மிகுதி பணத்தை விரைவாக செலுத்துவதற்கும் அவ்வாறில்லையாயின் மிகைப் பணத்தை மீண்டும் வரிசை அமைச்சிற்கு நிதியத்தை அனுப்புவதற்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிபுணத்தா சிசுசவிய மாணவர் உதவி நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி உரிய நோக்கங்களுக்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |